# லாட்டரி அதிபர் மார்ட்டின் வீட்டில் அமலாக்கத்துறை 2வது நாளாக சோதனை



# ஊட்டச்சத்து உறுதி செய் திட்டத்தின் 2வது தொகுப்பை தொடங்கி வைத்த முதல்வர்

# 4 நாட்களுக்கு பிறகு உயர்ந்த தங்கம் விலை




# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 15-11-2024 வெள்ளிக்கிழமை •வெளியூர்: 16-11-2024 சனிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்




# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 29 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 ஜமாதுல் அல்வல் 12

மாநிலம் பயனுற!




● புதுச்சேரி ● வெள்ளிக்கிழமை, நவம்பர் 15, 2024 ● வெளியூர்: 16-11-2024, சனிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 128 ● 6 பக்கம் ● ரூ.6

# ஊட்டச்சத்து உறுதி செய்' திட்டத்தின் 2வது தொகுப்பு

## முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்





**அரியலூர், நவ. 15-**

பள்ளிக்குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு பொருட்களை வழங்கும் பொருட்டு, ரூ.22 கோடியில் ஊட்டச்சத்து உறுதி செய் திட்டத்தின் 2வது தொகுப்பை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அரியலூர் மாவட்டம் திருமானூர் வட்டாரம் வாரணாசியில் தொடங்கி வைத்தார்.

அப்போது அங்கிருந்த உணவு பொருட்கள் கண்காட்சியினை அவர் பார்வையிட்டார். அப்போது மகளிரால் தயாரிக்கப்பட்ட ஊட்டச்சத்து மிக்க உணவு பொருட்களை அவர் சுவைத்து அது குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் அங்கிருந்த அங்கன்வாடிக்கு சென்று குழந்தைகளை கொஞ்சி மகிழ்ந்தார். பின்னர் அவர் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து தொகுப்பினை அவர் வழங்கினார்.

பின்னர் அவர் அங்கு மரக்கன்றை நட்டார். பின்னர் அவர் விழா மேடைக்கு சென்றபோது, பூக்களுடன் நின்றிருந்த குழந்தைகளை பார்த்து அருகில் சென்றார். அப்போது குழந்தைகள் அவருக்கு பூக்களை பரிசளித்தனர். அதனை மகிழ்வுடன் பெற்று கொண்ட அவர் விழா மேடைக்கு சென்றார்.

மேடையில் வாரணாசியை சேர்ந்த ராகவி, பரமேஸ்வரி சக்கரபாணி, மல்லூர் ராஜேஸ்வரி கார்த்திக், மரவனூர் ஜெயபிரியா பாண்டியன், ஆயிஷா பானு உள்ளிட்ட குழந்தைகள் பெற்ற தாய்மார்களுக்கு அவர் ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கி இத்திட்டத்தின் 2வது தொகுப்பினை தொடங்கி வைத்தார்.

அதன் பின்னர் இத்திட்டத்தின் முதலாம் கட்ட பயனாளிகள், இத்திட்டத்தின் பயன் குறித்து பேசினர். சுகந்தி என்ற பெண் பேசும்போது, என் குழந்தை குறை மாசத்தில் பிறந்ததால் எடை குறைவாக இருந்தது. பல இடங்களில் சென்று பார்த்தபோது எந்த பயனும் இல்லை. இந்நிலையில் முதலமைச்சரின் ஊட்டச்சத்து பெட்டகம் கொடுக்கப்பட்டது. இதன் பயனாக எனது குழந்தைக்கு நல்ல வளர்ச்சி தெரிந்தது. தற்போது எனது குழந்தை ஆரோக்கியமாக உள்ளது என்று அவர் பேசினார்.

இதனை தொடர்ந்து முதலாம் கட்ட பயனாளி ரம்யா பேசும்போது, எனது குழந்தையின் எடைக்கு ஏற்ற உயரமில்லை. உங்கள் திட்டம் குறித்து கேள்வி பட்டு அங்கன்வாடி மையத்திற்கு சென்று ஊட்டச்சத்து பெட்டகத்தை பெற்று அதனை சாப்பிட்டு, எனது குழந்தைக்கு தாய்பால் புகட்டினேன். இதனால் எனது குழந்தை மிகுந்த ஆரோக்கியமாக உள்ளது என்று அவர் கூறினார்.

மகாலட்சுமி என்பவர் பேசும்போது, போன வருடம் கொடுத்த தொகுப்பினை நானும் சாப்பிட்டேன், குழந்தைக்கும் கொடுத்தேன். தற்போது நானும் குழந்தையும் நலமாக உள்ளோம். அதனால் தான் உங்களை பார்த்து நன்றி சொல்ல வந்தேன் என்று அவர் பேசினார்.

மேடையில் பேசிய தாய்மார்களின் குழந்தைகளை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மடியில் அமர வைத்து கொஞ்சி மகிழ்ந்தார்.

விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், கீதா ஜீவன், சிவசங்கர், எம்.பி.க்கள் திருமாவளவன், ஆர்.ராசா, அருண் நேரு, சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், கலெக்டர் ரத்தினசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வருகிற 29ந்தேதி ஆந்திரா வருகிறார் பிரதமர் மோடி

**ஆந்திரா, நவ.15-**

ஆந்திர சட்டமன்ற கூட்டத்தொடர் நடந்து வருகிறது. நேற்று சட்டமன்றத்தில் தொழில் துறை சம்பந்தமாக விவாதம் நடந்தது.



அப்போது முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு பேசுகையில்:

பிரதமர் நரேந்திர மோடி வருகிற 29ந்தேதி விசாகப்பட்டினம் வருகிறார். விசாகப்பட்டினத்தில் பசுமை பூங்கா அமைப்பதற்காக ஏற்கனவே 1200 ஏக்கரை மாநில அரசு கையகப்படுத்தி உள்ளது.

அந்த இடத்தில் ரூ.80 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் பசுமை தொழில் பூங்கா அமைப்பதற்காக அடிக்கல் நாட்டுகிறார். அமோனியா மற்றும் பசுமை ஹைட்ரஜன் மையம் அமைக்கப்பட உள்ளது.பசுமை ஹைட்ரஜன் மையத்தில் என்.டி.பி.சி 20 ஜிகா வாட் மின்சாரம் தயாரிக்கப்படும். இதன் மூலம் ஆந்திராவில் மின்சார பற்றாக்குறை தீர்க்கப்படும் என்றார்.

இந்த 2 பெரிய திட்டங்கள் மூலம் 48 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளதாக தொழில் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## களக்காடு தலையணையில் நீர்வரத்து அதிகரிப்பு: மணிமுத்தாறில் குளிக்க தடை



**திருநெல்வேலி, நவ.15-**

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை வனப்பகுதி இந்தியாவிலேயே அதிகம் மழைப்பொழிவு பெறும் வனப்பகுதியாகும். இங்கு நேற்று முன்தினம் இரவு திடீரென மழை பெய்ய தொடங்கியது. அங்குள்ள காக்காச்சி, நாலுமுக்கு, ஊத்து உள்ளிட்ட இடங்களில் இரவு முழுவதும் மழை நீடித்தது.

நேற்றும் பகலில் தொடங்கி இன்று காலை வரையிலும் நாலுமுக்கு, ஊத்து பகுதியில் பலத்த மழை பெய்தது. காக்காச்சி பகுதியில் பரவலாக மழை பெய்தது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ஊத்து எஸ்டேட்டில் 10.1 சென்டிமீட்டரும், நாலுமுக்கில் 9.6 சென்டிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

இதேபோல் மாஞ்சோலை, காக்காச்சி தேயிலை தோட்ட பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. மாஞ்சோலையில் 8 சென்டிமீட்டரும், காக்காச்சியில் 9 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நேற்று மணிமுத்தாறு அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்றும் அங்கு மழை பெய்து வருவதால் 2வது நாளாக சுற்றுலாப் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை வனத்துறை நீட்டித்துள்ளது.

களக்காடு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக களக்காடு தலையணை சூழல் சுற்றுலா பகுதியில் தலையணையில் நீர்வரத்து அதிகரிப்பின் காரணமாக சுற்றுலாப் பயணிகள் தலையணையில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் சுற்றுலா பயணிகள் பார்வையிட மட்டும் அனுமதி வழங்கப்படுகிறது.

## 4 நாட்களுக்கு பிறகு சற்று உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, நவ. 15-**

தங்கம் விலை இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்ட நிலையில், கடந்த மாதம் 30ம் தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் பெற்றது. இதன் மூலம் தங்கம் விலை மீண்டும் வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டியது. தொடர்ந்து தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வந்த நிலையில், கடந்த சில தினங்களாக சரிவை சந்தித்து வருகிறது. நேற்று தங்கம் விலை சவரனுக்கு ரூ.880 குறைந்து ரூ.55,480 க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், தங்கம் விலை 4 நாட்களுக்கு பிறகு சற்று உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.55,560க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ரூ.6,945 க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை மாற்றம் இன்றி ஒரு கிராம் ரூ.99க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## கோவையில் லாட்டரி அதிபர் மார்ட்டின் வீடு உள்பட 5 இடங்களில் அமலாக்கத்துறை 2வது நாளாக சோதனை

**கோயமுத்தூர், நவ.15-**

கோவையை சேர்ந்தவர் தொழில் அதிபர் மார்ட்டின். இவர் பல்வேறு மாநிலங்களில் லாட்டரி விற்பனையில் முக்கிய பங்கு வகித்து வருகிறார்.

அவர் லாட்டரி விற்பனையில் முறைகேடு செய்து ரூ.910 கோடியை பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக அமலாக்கத் துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அத்துடன் மார்ட்டினின் ரூ.450 கோடி அசையா சொத்துக்களை அமலாக்கத்துறை ஏற்கனவே முடக்கி இருக்கிறது. இதற்கிடையே கடந்த ஆண்டு மே மற்றும் அக்டோபரில் கோவை, சென்னையில் உள்ள மார்ட்டின், அவருடைய மருமகன், உறவினர்கள் வீடுகளில் சோதனை நடந்தது.

இந்த சோதனையில் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிகிறது.

இந்த ஆவணங்களின் அடிப்படையில் நேற்று சென்னை மற்றும் கோவை துடியலூர் அருகே உள்ள வெள்ளக்கிணர் பகுதியில் இருக்கும் மார்ட்டின் வீடு, அலுவலகம் மற்றும் அவர் நடத்தி வரும் ஹோமியோபதி கல்லூரி உள்பட 7 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடந்தது. காலையில் தொடங்கிய சோதனையானது இரவு தாண்டியும் நீடித்தது.



இன்று காலை 2வது நாளாக, வெள்ளக்கிணர் பகுதியில் உள்ள மார்ட்டின் வீட்டில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டனர். சோதனையையொட்டி அவரது வீட்டின் நுழைவு வாயில் யாரும் உள்ளே நுழைய முடியாதபடி பூட்டப்பட்டது. வீட்டில் உள்ள ஒவ்வொரு அறைகளிலும் இன்றும் சோதனை மேற்கொண்டனர்.

இதேபோல் வீட்டின் அருகே உள்ள அலுவலகம் மற்றும் மார்ட்டின் நடத்தி வரக்கூடிய ஹோமியோபதி கல்லூரியிலும் 2வது நாளாக சோதனை நடந்தது.

கல்லூரியில் உள்ள அலுவலக அறைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் அலசி ஆராய்ந்து சோதனை மேற்கொண்டனர். தொடர்ந்து சோதனையானது நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே சரவணம்பட்டி மற்றும் சாய்பாபாகாலனியில் உள்ள மார்ட்டினின் உறவினர்கள் 2 பேர் வீட்டில் இன்று அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

சோதனையில் அமலாக்கத்துறை அதிகாரிகளுக்கு சில ஆவணங்கள் கிடைத்து இருப்பதாக கூறப்படுகிறது. இருந்தபோதிலும் என்னென்ன ஆவணங்கள் கிடைத்தது என்பது உறுதியாக தெரியவில்லை.

இந்த வழக்கு தொடர்பான சோதனைகள் முழுமை அடைந்த பின்னர் என்னென்ன ஆவணங்கள் சிக்கின என்ற அதிகாரபூர்வ தகவலை அமலாக்கத்துறை தரப்பில் வெளியிடப்படும் என்று தெரிகிறது.

சோதனையையொட்டி, சோதனை நடைபெற்று வரும் 3 இடங்களில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தினமும்
மாலையில்
மாலை
எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

## இலங்கை பாராளுமன்ற தேர்தல் அதிபர் அனுர குமார திச நாயகா கட்சி அபார வெற்றி

**கொழும்பு, நவ.15-**

இலங்கை பாராளுமன்ற தேர்தல் நேற்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 4 மணி வரை அமைதியான முறையில் நடந்தது. வாக்குப் பதிவு முடிந்ததும் உடனடியாக ஓட்டுகள் எண்ணும் பணி தொடங்கியது.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டது. இதில் பெரும்பாலான இடங்களில் அதிபர் அனுரா குமார திச நாயகா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ( என்.பி.பி,) கட்சி முன்னிலை வகித்தது. தொடர்ந்து நடந்த ஓட்டு எண்ணிக்கையில் மொத்தம் உள்ள 225 தொகுதிகளில் தொடக்கம் முதலே தேசிய மக்கள் சக்தி கட்சி முன்னிலை வகித்து வந்தது.

எதிர்கட்சிகளை விட அதிக ஓட்டுகள் பெற்று முன்னிலையில் இருந்து வந்தது. நேரம் ஆக ஆக அக்கட்சி அதிக ஓட்டுகள் பெற்று வெற்றி முகத்தில் இருந்தது. ஓட்டுகள் பாதி எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் தேசிய மக்கள் சக்தி கட்சி 63 சதவீத ஓட்டுகள் பெற்று இருந்தது.

இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி 11 சதவீத வாக்குகளும், முன்னாள் அதிபர் ரணில் விக்கிரம சிங்கே ஆதரவு பெற்ற தேசிய ஜனநாயக முன்னணி 5 சதவீத வாக்குகளும் பெற்று மிகவும் பின் தங்கி இருந்தது. முன்னாள் அதிபர் ராஜபக்சேவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனா வெறும் 2.98 சதவீத வாக்குகள் மட்டுமே வாங்கி பரிதாப நிலையில் இருந்தது. வாக்கு எண்ணிக்கை முடிவில் 123 இடங்களில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது. பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மைக்கு 113 இடங்களும் சிறப்பு பெரும்பான்மைக்கு 150 இடங்களும் தேவை. இந்த மேஜிக் எண்ணை அக்கட்சி எளிதில் எட்டி பிடித்தது. சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி 7 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இத்தேர்தலில் முன்னாள் மந்திரிகள் பலர் தோல்வி அடைந்தனர்.

ஈழத்தமிழர்களின் தலைநகராக போற்றப்படும் திரிகோணமலை, மூதூர், சேருவில் தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி கட்சி அபார வெற்றி பெற்றது. இந்த 3 தொகுதிகளிலும் இலங்கை தமிழரசு கட்சி தோல்வியை சந்தித்தது.

திரிகோணமலை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 2 இடங்களிலும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் இலங்கை தமிழரசு



கட்சி தலா ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர், மானிப்பாய், கோபாய் தொகுதிகளிலும் ஆளும் கட்சியே ஆதிக்கம் செலுத்தியது. யாழ்ப்பாணம் ஊர்க்கா வந்துறை தொகுதியில் டக்ளஸ் தேவனாந்தா கட்சி வெற்றி பெற்றது. யாழ்ப்பாணம் மாவட்டம் கிளி நொச்சியில் இலங்கை தமிழரசு கட்சி வெற்றி வாகை சூடியது.

ராஜபக்சே குடும்பத்தினரின் கோட்டையாக கருதப்படும் அம்பாந்தோட்டை தொகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனா கட்சி கடுமையான தோல்வியை தழுவியது.

இந்த தொகுதியிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது. இக்கட்கி கடந்த பாராளுமன்ற தேர்தலில் வெறும் 3 உறுப்பினர்களை மட்டுமே பெற்றது.

ஆனால் இந்த தேர்தலில் இலங்கை பொதுமக்கள் ஓட்டு மொத்தமாக தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு ஆதரவாக வாக்களித்து உள்ளதால் அக்கட்சி மிக எளிதாக பாராளுமன்றத்தை கைப்பற்றி உள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த இலங்கை அதிபர் தேர்தலில் அனுர குமார திசநாயகா வெற்றி பெற்று புதிய அதிபராக பதவி ஏற்றார்.

இதைத்தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. இதிலும் தேசிய மக்கள் சக்தி விசுவரூப வெற்றி பெற்று இருக்கிறது.

இலங்கை பாராளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மை இருந்தால் அரசியலமைப்பு சட்டத்தில் மாற்றங்களை கொண்டு வருவது உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களை நிறைவேற்ற முடியும். தற்போது தேசிய மக்கள் சக்தி கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளதால் சட்ட மசோதாக்களை நிறைவேற்றுவதில் எந்த சிக்கலும் இருக்காது.

தேசிய மக்கள் சக்தி கட்சி அபார வெற்றி பெற்றதை அக்கட்சியினர் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

# புதுச்சேரியில் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் வழங்கல்



புதுச்சேரி, நவ. 15-

புதுவையில் நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் வழங்கப்பட்டது.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை மூலம் செயல்படுத்தப் படும் பயிர் உற்பத்தி திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டு காரைக்கால் பகுதியில் குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று சட்டசபை யில் நடந்தது.

நிகழ்ச்சியில், 794 பொது பிரிவு விவசாயி களுக்கு ரூ. 82,77,550 மற்றும் அட்டவணை பிரிவை சேர்ந்த 121 விவசாயிகளுக்கு ரூ. 8,81,160 என, மொத்தம் 915 விவசாயிகளுக்கு ரூ. 91,58,710 உற்பத்தி மானியத் திற்கான காசோலையை அமைச்சர் தேனீ. ஜெயக்குமார் வாங்கினார். நிகழ்ச்சியில், வேளாண் இயக்குநர் வசந்தகுமார், கூடுதல் வேளாண் இயக்கு நர் கணேசன் கலந்து கொண்டனர்.

இந்த தொகை நேற்று முதல் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டது.

# புதுவை நகரப் பகுதியில் பாதாள சாக்கடை சீரமைப்பு பணி

## முதலமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்





புதுச்சேரி, நவ. 15-

புதுவை நகர பகுதியான புல்வார்டு பகுதியில் 40 ஆண்டுக்கு முன் பாதாள சாக்கடை அமைக்கப் பட்டது.

இதனால் கழிவு நீர் தொட்டி களிலிருந்து வெளியேறி பொதுமக் களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. இதனை சரி செய்ய ரூ. 52.43 கோடியில் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பாதாள சாக்கடை குழாய்களின் தன்மையை கேமரா செலுத்தி பரிசோதனை செய்யப்படும். வண்டல் மன் தூர்வாரப்படும். பழுதடைந்த குழாய்கள் தோண்டப்படாமல் நவீன முறையில் மாற்றப்படும். சாக்கடை தொட்டிகள் சரி செய்யப்பட்டு, புதிய தொட்டிகள் கட்டப்படும்.

இந்த பணிகள் அனைத்தும் பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பூமி பூஜை விழா நேற்று நடந்தது. முதலமைச்சர் ரங்கசாமி பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சபாநாயகர் செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன்,கண்காணிப்பு பொறியாளர்கள் வீர செல்வம், பாலசுப்பிர ணியன், பொது சுகாதார கோட்ட செயற்பொறி யாளர் உமாபதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# தலையங்கம்

## மாலை எக்ஸ்பிரஸ்

15.11.2024 (வெள்ளிக்கிழமை)

## இந்தியனுக்கு பெருமை

உலகுக்காக தயாரிப்போம்' என்பது மத்திய அரசாங்கத்தின் லட்சிய முழக்கமாக இருக்கிறது. அந்த வகையில், இப்போது இந்திய ராணுவத்துக்காக போக்குவரத்து விமானங்கள் தயாரிக்கும் பணி குஜராத்தில் தொடங்கிவிட்டது. இதுவரை இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆவ்ரோ விமானங்கள் இந்திய ராணுவத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்த விமானங்களுக்கு பதிலாக நவீன ரக ஏர்பஸ் விமானங்களை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, சி295 ரகத்திலான 56 விமானங்களை ரூ.21,935 கோடி செலவில் வாங்குவதற்கு ஸ்பெயின் நாட்டிலுள்ள ஏர்பஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன்படி, 16 விமானங்களை பறக்கும் நிலையிலேயே முழுமையாக தயாரித்து இந்தியாவுக்கு வழங்குவதாகவும், மீதமுள்ள 40 விமானங்களை இந்தியாவிலேயே தயாரித்து கொடுப்பதாகவும் ஏர்பஸ் நிறுவனம் தெரிவித்தது. இந்த விமானங்களை தயாரித்து வழங்கும் பணி டாடா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சமீபத்தில் மரணமடைந்த டாடா சன்ஸ் குழும தலைவர் ரத்தன் டாடா இதற்காக அதிக ஆர்வம் காட்டிவந்தார். அவரது முயற்சியின் பலனாகத்தான் டாடா நிறுவனத்துக்கு 40 விமானங்களை தயாரிக்கும் ஒப்பந்தம் கிடைத்தது.

இவை அனைத்தும் ராணுவ பயன்பாட்டுக்கான போக்குவரத்து விமானங்களாகும். இந்த 40 விமானங்களை தயாரிக்க குஜராத் மாநிலம் வதோதராவில் ஒரு தொழிற்சாலை அமைக்க முடிவு செய்யப்பட்டு, 2022ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரதமர் நரேந்திரமோடி அடிக்கல் நாட்டினார். நாட்டின் முதல் ராணுவ விமானங்களை தயாரிக்கும் தொழிற்சாலை இதுதான். இப்போது கட்டுமான பணிகள் அசுர வேகத்தில் முடிந்து உற்பத்திக்கு தயாராக இருக்கும் நிலையில், இந்தியா வந்திருந்த ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ்சும், பிரதமர் நரேந்திரமோடியும் இணைந்து இந்த தொழிற்சாலையை திறந்து வைத்தனர்.

உடனடியாக விமான உற்பத்தியும் இங்கு தொடங்கிவிட்டது. '2026ல் முதல் விமானம் இந்த தொழிற்சாலையில் இருந்து வெளியேவந்து பறக்கத்தொடங்கும்' என்று ஸ்பெயின் பிரதமர் கூறியிருக்கிறார். விமானத்துக்கு தேவையான முக்கிய உதிரிபாகங்கள் தயாரிக்கும் பணி ஐதராபாத்தில் ஏற்கனவே தொடங்கிவிட்டது. விமானத்தை உற்பத்தி செய்ய 40 ஆயிரம் உதிரிபாகங்கள் தேவை. இதில் 13 ஆயிரம் உதிரி பாகங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது. இதற்காக கடந்த 5 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான புத்தாக்க நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. உத்தரபிரதேசத்திலும், தமிழ்நாட்டிலும் ராணுவத்தில் தொழில் வழித்தடங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஆக, இந்த தொழிற்சாலைக்கு தேவையான அனைத்து உதிரிபாகங்களும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு, முழுக்க.. முழுக்க.. இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட விமானமாக இது திகழும் என்பதில் ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமை. நமது தேவைக்கு போக உலகுக்காக தயாரிப்போம் என்ற லட்சியத்துக்கேற்ப, உலகில் பல நாடுகளுக்கு சி295 விமானங்கள் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறது. இதுபோல, இந்தியாவில் பயணிகள் விமான தேவை அதிகளவில் இருக்கிறது. அதையும் இந்த தொழிற்சாலையிலேயே தயாரிக்கும் திட்டம் இருக்கிறது. குஜராத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலையில் இப்போதே 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட இருக்கிறது. மேலும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 27 ஆயிரம் உதிரிபாகங்களையும் இங்கேயே தயாரித்தால் கூடுதலாக பல ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதற்கான தொழிற்சாலைகளை தமிழ்நாட்டிலுள்ள ராணுவ தளவாட வழித்தடத்தில் தொடங்கவேண்டும்

# கூலித் தொழிலாளியின் உடல் அரசு மருத்துவ கல்லூரிக்கு தானம்



புதுக்கோட்டை, நவ. 15-

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரிக்கு கூலித்தொழிலாளியின் உடல் நேற்று தானம் செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அருகே பெரிய கள்ளங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் எல்.செல்வம்(60). தென்னை மரத்தில் தேங் காய் பறிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தார். சிறுநீரகப் பாதிப்பினால் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

தான் இறந்த பிறகு, தனது உடலை மருத்துவக் கல்லூரியில் தானம் செய்யுமாறு தனது குடும் பத்தினரிடம் ஏற்கனவே கூறி இருந்ததாக கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, செல்வத்தின் உடலை புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல் லூரிக்கு தானம் செய்யஅவரது மனைவி சித்ரா, மகன் முகிலன் ஆகியோர் சம்மதித்தனர்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து சொந்த ஊருக்கு செல்வத்தின் உடல் கொண்டு செல்லப்பட்டது. அங்கு, இறுதிச் சடங்கு செய்த பிறகு, ஆம்புலன்ஸ் மூலம் அவரது உடல் மீண்டும் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியின் உடற் கூறாய்வுத் துறைப் பேராசிரியர் பூங்கோதை யிடம் நேற்று தானமாக ஒப்படைக்கப்பட்டது.

# தோரணமலையில் பௌர்ணமி பூஜை



தென்காசி, நவ. 15-

தென்காசி மாவட்டம் கடையம் அருகே அமைந் துள்ளது தோரணமலை ஸ்ரீ முருகன் கோவில் சித்தர்கள் முனிவர்களால் வழிபட்ட சிறப்புடைய கோவிலில் மாத மாதம் பௌர்ணமி கிரிவலம் பூஜை நடைபெறுவது வழக்கம். சுமார் 6:30 கிலோமீட்டர் தூரம் உள்ள கிரிவலப் பாதையில் தோரணமலை முருகனை வழிபட்டு அரோகரா கோசத்துடன் பக்தர்கள் கிரிவலம் வந்தனர். பின்பு கடைசி வெள்ளியை முன்னிட்டு பக்தர்கள் மலை மீது சுனையில் இருந்து தீர்த்தத்தினை எடுத்து வந்து அடிவாரத்தில் உள்ள ஸ்ரீ வல்லப விநாயகர் கோவில் அருகே உள்ள உற்சவர் சிலைக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. பின்பு பக்தர்கள் கலந்துகொண்ட கூட்டு பிரார்த்தனை நடை பெற்றது. கூட்டு பிரார்த்தனையில் உலக மக்கள் நலம் பெற வேண்டியும், மாணவர்கள் கல்வியில் சிறக்க வேண்டி ,விவசாயம் செழிக்க வேண்டியும், கிராமப்புற மக்களின் பொருளாதாரம் மேம்பட வேண்டியும், சிறப்பு கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்துகொண்டு பிரார்த்தனை செய்தனர்.

இந்த சிறப்பு பூஜையில் கலந்துகொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப் பட்டது. காலை, மதியம் அன்னதானம் வழங்கப் பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் செண்பகராமன் செய்திருந்தார்.

# மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்



வேலூர், நவ. 15-

வேலூர் மாவட்டம், வேலூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்களில் பெறப்பட்ட மனுக்களில் 400 பயனாளிகளுக்கு ரூ.1.95 கோடி மதிப்பிலான நலதிட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் பேபி மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநக ராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, வேலூர் ஒன்றியக்குழுத் தலைவர் அமுதா ஞானசேகரன், மண்டலக் குழுத்தலை வர்கள் நரேந்திரன், யூசுப்கான்,வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப் பிரமணியன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டி





வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் முத்துசாமி, ஈரோடு மாவட்டம், வாய்க்கால்மேடு, நந்தா பொறியியல் கல்லூரியில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டியினை துவக்கி வைத்தார். உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் செல்வராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுப்பாராவ்.

# அதிமுகவினர் 200 பேர் அமைச்சர் தலைமையில் திமுகவில் இணைந்தனர்



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் முன்னாள் நகர செயலாளர் சரவணகுமார் தலைமையில் சுயேச்சை கவுன்சிலர் 4 பேர்உட்பட அதிமுகவினர் 200 பேர் அமைச்சர் பொன்முடி திமுகவில் இணைந்தனர். இதில் ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.விஸ்வநாதன், ஒன்றிய பெருந்தலைவர் ஓம் சிவ சக்திவேல், திருவெண்ணைநல்லூர் நகர செயலாளர் பூக்கடை கணேசன் மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# கடலில் குளித்த வாலிபர் ராட்சத அலையில் சிக்கி சாவு

காரைக்கால், நவ. 15-

காரைக்கால் கடலில் குளித்த கும்பகோணத்தை சேர்ந்த வாலிபர் ராட்சத அலையில் சிக்கி பலியானார்.



காரைக்கால் மாவட்ட கடற்கரைக்கு தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை பகுதியைச் சேர்ந்த அப்துல் கபூர் (19), சாதிக், உள்ளிட்ட 8 நண்பர்கள் காரைக்கால் கடற்கரைக்கு நேற்று மாலை சுற்றுலா வந்துள்ளனர்.

தொடர்ந்து , கடலில் குளிக்க வேண்டாம் என்ற போலீசாரின் எச்சரிக்கை போர்டையும் அலட்சியப்படுத்திவிட்டு வாலிபர்கள் சிலர் கடலில் இறங்கி குளித்துள்ளனர். அப்போது ஷேக் அலாவுதீன் மகன் அப்துல் கபூர் (19), திடீரென பொங்கி எழுந்த ராட்சத அலையில் சிக்கி கடலில் தவறி விழுந்தார். உடனடியாக சக நண்பர்கள் காப்பாற்ற முயன்றும் முடியாததால், உடனே மாவட்ட தீயணைப்பு துறை மற்றும் கடலோர போலீசாருக்கு வாலிபர்கள் தகவல் தெரிவித்தனர். சுமார் 1 மணி நேரம் போராட்டத்திற்குப் பிறகு தீயணைப்பு துறையினர் வாலிபரின் உடலை மீட்டு காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுகுறித்து காரைக்கால் நகர காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் காரைக்கால் மற்றும் கும்பகோணம் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வளரிளம் பெண்களுக்கு ஆலோசனை கூட்டம்





சேலம், நவ. 15-

சேலம் அயோத்தியாபட்டணம் ஒன்றியத்தில் நொச்சிப்பட்டியில் உள்ள நல்லாயன் கன்னியர் இல்லம் மூலமாக தொடங்கப்பட்ட பட்டியலின மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கான சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏ.என். மங்கலம், ஏரிப்புதூர், வலசையூர், பள்ளிப் பட்டி, சுக்கம்பட்டி, பூவனூர், டி.பெருமா பாளையம், கருமாபுரம் போன்ற பஞ் சாயத்துகளில் பெண்களுக்கும், குழந்தை களுக்கும், வளரிளம் பெண்களுக்கும், ஆண்களுக்கும் பாதுகாப்பு கொள்கை மற்றும் விதிமுறைகள் என்ன உள்ளன ஈ ஜ திட்டத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியமேரி கலந்துரையாடல் செய்தார்கள்.

குழந்தைகளுக்கு எந்த இடங்களில் பாதுகாப்பு கிடைக்கிறது, பாதுகாப்பு மறுக்கப்படும் பொழுது எங்கு சென்று தகவல்களை தெரிவிக்கலாம் என ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்துரை யாடல் செய்யப்பட்டது. இந்த கூட்ட மானது ஒவ்வொரு மாதமும் குழந்தை களுக்கும், பெண்களுக்கும் வளரிளம் பெண்களுக்கும், ஆண்களுக்கு தொடர்ந்து இந்த கூட்டமானது நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதால் தங்களுக்கு என்ன பிரச்சனைகள் வந்தாலும் யாரிடம் தெரிவிக்கலாம் என தெரிந்து கொண்டார்கள். அதற்கு எப்படி தீர்வு காணலாம் என தெரிந்து கொண்டார்கள். இந்த கூட்டத்தில் கலந்துகொண்டதால் அனைவருக்கும் மன தைரியம் மற்றும் விழிப்புணர்வும் ஏற்பட்டு வருகிறது என அனைவரும் கூறினர்.

# அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் சிறப்பு மருத்துவ முகாம்



சேலம், நவ. 15-

விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவ மனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை தமிழ்நாடு விமானப்படை, அரசு பொறியியல் கல்லூரி இணைந்து தேசிய மாணவ படை தினத்தை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் தேசிய மாணவர் படை தினமானது மாணவர் களிடையே சமூக பங்களிப்பினை செலுத்தி நாட்டின் வளர்ச்சி மற்றும் அவர்களிடையே தலைமை பண்புகளை கொண்டு சேர்க்கும் நோக்கத்தோடு ஆண்டுதோறும் நவம்பர் மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் தேசிய மாணவர் படைஅமைப்பு (5) தமிழ்நாடு விமானப் படை, சேலம் அரசு பொறியியல் கல்லூரி ஆகியவை இணைந்து சிறப்பு இலவச மருத்துவ முகாம், ரத்ததான முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியது. நிகழ்ச்சிக்கு அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் டீன் பேராசிரியர் டாக்டர். செந்தில்குமார் முன்னிலை வகித்து தொடக்கி வைத்து சமூகத்தின் வளர்ச்சியில் மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் சேவைகள் குறித்தும், உடல் நல ஆரோக்கியத்தின் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். 5 தமிழிநாடு விமானப் படை கட்டளை அதிகாரி குரூப் கேப்டன் முருகானந்தம் தலைமையுரை யாற்றினார். அரசு பொறியியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் விஜயன் வாழ்த்துரை வழங்கினார். மேலும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் மாவட்ட ரத்த சேகரிப்பு அலுவலர் டாக்டர்.ரவீந்திரன் மற்றும் சேலம் 11வது தமிழ்நாடு பட்டாலியன் கட்டளை அதிகாரி சூரஜ் நாயர் ஆகியோரும் பங்கேற்று சிறபித்தனர்.

இச்சிறப்பு மருத்துவ முகாமில் சுமார் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அவர்களுக்கு இலவச அடிப்படை மருத்துவ பரிசோதனை கண் பரிசோதனை, பல் பரிசோதனை, இருதய பரிசோதனை போன்றவை மேற்கொள்ளப்பட்டு தேவை படுவோருக்கு மருத்துவ ஆலோசனையும் வழங்கப்பட்டது. தொடர்ந்து சுமார் 100 பேர் ரத்த தானம் வழங்கினர். பெறப்பட்ட இரத்தமானது சேலம் அரசு மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டது. மேலும் சேலம் மாவட்ட புகையிலை கட்டுபாட்டு அலுவலக ஆலோசகர் டாக்டர்.அஸ்வந்த் வெற்றிவேல், மாவட்ட சுகாதார கல்வியாளர் பிலவேந்தரன் மாவட்ட சமூக பணியாளர் ஹரி, சர்வேஷ் மருத்துவமனை யின் மருத்துவர் டாக்டர். திவ்யா, தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி பேராசிரியை டாக்டர்.நர்மதா. சேலம் குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர்.விநோதினி, சேலம் அரசு மருத்துமனையின் உதவி பேராசிரியை டாக்டர்.ஸ்ரீதேவி ஆகியோர் பங்கேற்று உடல் நல ஆரோக்கியம் சார்ந்த பல்வேறு தலைப்புகளின் கீழ் சிறப்புரையாற்றினர்.

இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் தேசிய மாணவப்படை அமைப்பு, 5 தமிழ்நாடு விமானப்படை அமைப்பு மற்றும் சேலம் அரசு பொறியியல் கல்லூரி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் செய்திருந்தனர்.

# குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்



கிருஷ்ணகிரி, நவ. 15-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த காரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இன்று குழந்தை தின விழாவை முன்னிட்டு பள்ளி குழந்தைகளுக்கு தேவையான பேனா, பென்சில், ஸ்கேல், ஜாமென்ட்ரி பாக்ஸ் மற்றும் இனிப்பு வகைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தமிழன் தொலைக்காட்சி சார்பாக மாவட்ட செய்தியாளர் கே.சி. பெருமாள் ஏற்பாடு செய்த நிலையில் ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் முருகன் பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி கல்வி உபகரணங்களை வழங்கினார். நிகழ்வில் ஊராட்சி மன்ற தலைவர் ரமாதேவி கோவிந்தன், தலைமை ஆசிரியர் ஆறுமுகம், மற்றும் ஆசிரியர் அருண், ஆசிரியைகள் வசந்தி, பிரியா, மணிமேகலை, பூர்ணிமா, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சங்கர், பொருளாளர் கே.சி.பெருமாள், மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஜீவன், வசந்த், கௌதம் உள்ளிட்ட ஊர் பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி



கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மயிலேரிபாளையம் ஊராட்சி பேருந்து நிறுத்தத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி நடைபெறுவதை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர்.

# மீனவ கிராம கடற்கரை பகுதிகளை எம்பி ஆய்வு



புதுச்சேரி, நவ. 15-

காலாப்பட்டு சட்டமன்ற தொகுதி பிள்ளைசாவடி, சின்ன காலாப்பட்டு மீனவ கிராமங்களில் தற்பொழுது பெய்து வரும் கன மழையினால் கடல் சீற்றம் அதிகமாகி கடற்கரை சாலை மற்றும் வீடுகள் சேதம் அடைந்தும், மீன்பிடித் தொழில் செய்ய படகுகள் நிறுத்த முடியாத அளவிற்கும் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினரும், புதுச்சேரி பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவருமான வைத்திலிங்கம், முன்னாள் அமைச்சர் ஷாஜகான் பிள்ளைசாவடி மற்றும் சின்ன காலாப்பட்டு மீனவ கிராம கடற்கரை பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்பொழுது ஊர் பொதுமக்களும், மீனவ பஞ்சாயத்தாரும், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளும் உடன் இருந்தனர். அவர்கள் பிள்ளைச்சாவடி கிராமத்தில் தனியாருக்கு ஆதரவாக கல் கொட்டப்பட்டுள்ளது எனவும், மீனவர் கிராமத்திற்கு பயன்படாத வகையில் அரசாங்கம் செயல்பட்டுள்ளது எனவும் புகார் தெரிவித்தனர். மேலும், தற்பொழுது கடற்கரையில் கிழக்கு நோக்கி கல் கொட்டப்பட்டுள்ள பரப்பை மேலும் 50 மீட்டர் அளவிற்கு கல் கொட்டி நீட்டிக்க வேண்டும் எனவும் பிள்ளைச்சாவடி, சின்ன காலாப்பட்டு எல்லை பகுதியில் கல் கிழக்கு நோக்கி கொட்ட வேண்டும் எனவும் அவ்வாறு செய்தால் மீனவ கிராமத்தின் வீடுகள் மற்றும் சாலைகள் வரும் காலங்களில் பாதுகாக்கப்படும் என கோரிக்கை வைத்தனர்.

இதனை கேட்டு அறிந்த பாராளுமன்ற உறுப்பினர் புதுச்சேரி மீன்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளை கலந்து ஆய்வு கூட்டம் நடத்தி தகுந்த முன்னேற்பாடுகள் செய்வதாக வாக்குறுதி அளித்தார். இந்நிகழ்ச்சியில் பிள்ளை சாவடி மற்றும் சின்ன காலாப்பட்டு காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளும், மீனவ பஞ்சாயத்தாரும், ஊர் பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# திருப்பூர் கொண்டத்து காளியம்மன் கோவிலில் புதிய மண்டபம் கட்ட அடிக்கல் நாட்டு விழா







திருப்பூர், நவ. 15-

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைத்துறை சார்பில் புகழ்பெற்ற ஸ்ரீ கொண் டத்துக் காளியம்மன் கோவிலில் புதிய திருமண மண்டபம் நவீன தொழில்நுட்பத் துடன் ரூ.5 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழகத்தில் பல்வேறு திட்டங் களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் காணொலி காட்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டி வைத்தார்.

அதன் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் அறநிலைத்துறை இணை ஆணையர் ரத்தினவேல் பாண்டியன், உதவி ஆணையாளர் தனசேகரன், இந்து அறநிலைத்துறை சார்பில் உதவி செயற்பொருளாளர் சத்தியா, உதவி பொறியாளர்கள் கார்த்திக், கோபாலகிருஷ்ணன், திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கராஜ், ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன், கணக்கம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகசுந்தரம், தக்கர் சீனிவாசன், செயல் அலுவலர் சங்கரசுந்தரேஸ்வரன், ஒன்றிய துணைச் செயலாளர் மீனாட்சி திருமூர்த்தி, ஒன்றிய கவுன்சிலர் ரதாதினாம்பாள் சிவசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நந்து வேலுச்சாமி, ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் சிடிசி மணிகண்டன், தொமுச மாவட்ட அமைப்பு செயலாளர் வேல்முருகன், மாவட்ட பிரதிநிதிகள் சண்முகம், மணி, துணைச் செயலாளர் எம்ஆர் அண்ணாதுரை, ஒன்றிய அவைத் தலைவர் கணக்கம்பாளையம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வீரகுமார் மற்றும் எழுத்தர் ரவி, அனைத்து கட்சி நிர்வாகிகளும், ஊர் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# மாணவ, மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு வழிகாட்டும் பயிற்சி



சேலம், நவ. 15-

தமிழ்நாட்டில் ஈரோடு, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 50 அரசு பள்ளிக்கூடங்களில் படித்து வரும் 10 வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை அளிக்கும் வழிகாட்டும் பயிற்சியை அளித்து வருகிறார்கள். புதுடெல்லியை தலைமையிடமாக கொண்டு ஆஸ்மேன் பவுண்டேசன் என்ற தனியார் தொண்டு நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் கிராமப்புற பள்ளிக்கூட மாணவ, மாணவிகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சியை அளித்து வருகிறது. இதன் தொடக்க விழா நேற்று நடந்தது. பள்ளிக்கூட தலைமை ஆசிரியை ஆனந்தி தலைமை தாங்கினார். பவானி மகளிர் போலீஸ் நிலைய சப் –இன்ஸ்பெக்டர் மகேஸ்வரி முன்னிலை வகித்தார். கிரெடிட் அக்சஸ் இந்தியா நிறுவனத்தின் விற்பனை பிரிவு தலைவர் மஞ்சுநாத் பயிற்சியை தொடங்கி வைத்தார். திட்ட தலைமை அதிகாரி சந்திரசேகர், மண்டல மேலாளர் மணி, திட்ட மேலாளர் அருண் கோர்படே ஆகியோர் திட்டம் குறித்து பேசினர்.

இதுகுறித்து தலைமை அதிகாரி சந்திரசேகர் கூறும்போது, ஆஸ்மேன் பவுண்டேசன் நாடு முழுவதும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிைள மாணவ, மாணவிகளுக்கு வழங்குகிறது. தற்போது நம்ம ஊரு நம்ம பள்ளி திட்டத்தில் கிராமப்புற அரசுப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு பயிற்சி அளிக்க தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்து உள்ளது. மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியின் ஒப்புதலுடன் பயிற்சி வழங்குகிறோம். இதற்கான நிதி உதவியை கிரெடிட் அக்சஸ் கிரெமீன் நிறுவனம் வழங்குகிறது. 45 நாட்கள் எங்கள் ஊழியர்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து மாணவிகளுக்கு பயிற்சி அளித்து, மேற்படிப்புக்கான வழிகாட்டுதல்களை வழங்குவார்கள் என்றார்.

**மாட்சிமிகு கோட்டாட்சியர் அவர்கள், விழுப்புரம்.**
**அ.சி.மு.அ.எண்:4.72/2024 நாள்:12.11.2024**

திருஞானசம்பந்தம், த/பெ.திருவேங்கடம்,
வடக்கு தெரு, கரடிப்பாக்கம்,
திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.
...மனுதாரர்

வட்டாட்சியர் அவர்கள்,
திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா,
விழுப்புரம் மாவட்டம். .....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் ஆகிய நான் விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், கரடிப்பாக்கம் கிராமத்தில் கடந்த 03.08.1991 தேதியில் பிறந்ததாகவும், மனுதாரர் பதிவு செய்யாமல் விட்டு விட்டதாகவும், எதிர் மனுதாரர் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது. மேற்படி பிறப்பை பதிவு செய்ய யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் ஒருதலைபட்சமாக உத்தரவு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**மனுதாரர் விலாசம்**
**திருஞானசம்பந்தம், த/ப.திருவேங்கடம்,**
**வடக்கு தெரு, கரடிப்பாக்கம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம்,**
**விழுப்புரம் மாவட்டம். செல்: 9500332853**

E-mail:maalaiexpresspdy@gmail.com
● வெள்ளி ● நவம்பர் 15, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# யானைத் தந்தத்தால் ஆன பொம்மைகள் பறிமுதல்





விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகே லாட்ஜில் ரூ.5 கோடி மதிப்பிலான யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட 4 பொம்மைகள் பறிமுதல் செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக 12 பேரைப் பிடித்து வனத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் வட்டம், வேலம்பட்டு கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் பார்வையிட்டனர்.

# பத்து ரூபாய் சட்ட இயக்கம் பெயர் பலகை திறப்பு



புதுச்சேரி, நவ. 15-

புதுச்சேரி பத்து ரூபாய் சட்ட இயக்கம் தலைமை பெயர் பலகை ஆன்மீகச் செம்மல் ஆடிட்டர் டாக்டர்.வி. ரவி குத்து விளக்கு ஏற்றி பெயர் பலகை திறந்து வைத்தார். சில உறுப்பினர்களுக்கு அடை யாள அட்டை வழங்கினார். புதுச்சேரி பத்து ரூபாய் சட்ட இயக்கம் சார்பில் வருகின்ற ஜனவரி மாதம் முடிவில் பாரத பிரதமரை சந்தித்து புதுச்சேரிக்கு மாநில தகவல் ஆணையம் அமைக்க நேரில் சென்று வலியுறுத்தப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்காக அடுத்த டிசம்பர் மாதம் இயக்கத்தின் சார்பில் அனுமதி கேட்டு மனு அளிக்கப் படும். அதற்கான தீர்மானம் என்று நிறை வேற்றப்பட்டது. இதில் நிறுவனர் ரகு (எ) ரகுநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# புதிய மின்மாற்றிகளை துவக்கி வைத்த அமைச்சர்



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில், புதிய மின்மாற்றிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா.

# பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் நல்ல பெயரை பெற்று தரும் எண்ணத்தில் மாணவர்கள் சிறப்பாக படிக்க வேண்டும்: முதலமைச்சர் ரங்கசாமி பேச்சு



புதுச்சேரி, நவ. 15-

பெற்றோருக்கும், ஆசிரிய ருக்கும் நல்ல பெயரை பெற்று தர வேண்டும் என்ற எண்ணத்தில் மாணவர்கள் சிறப்பான வகையில் கல்வி கற்க வேண்டும் என, முதல மைச்சர் ரங்கசாமி மாணவர் களுக்கு அறிவுறுத்தினார்.

புதுவை அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பில் கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டபத்தில் குழந்தை கள் தின விழா நடைபெற்றது. விழாவிற்கு கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமை வகித்து மண்டல அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர் களுக்கு பரிசுகளை வழங்கினார்.

முதலமைச்சர் ரங்கசாமி சிறந்த படைப்பாளி குழந்தைகளுக்கு விருதுகள் வழங்கினார். இதனைத் தொடர்ந்து 6ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கான புதுவையின் வரலாற்று புத்தகத்தையும், குழந்தைகளுக்கான கதைகள், பாடல்கள் அடங்கிய புத்தகத்தையும் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் ரங்கசாமி பேசியதாவது, புதுவையை 100 சதவீதம் கல்வியறிவு உள்ள மாநிலமாகவும், மாணவர்கள் இடைநிற்றில் இல்லாத மாநிலமா கவும் மாற்றுவதே நமது அரசின் எண்ணம். தற்போது அந்த இலக்கை அடைந்துள்ளோம். பள்ளி மாணவர்கள் இடைநிற்றல் வெகுவாக குறைந்துள்ளது. பனிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி படிக்கும் வகையில் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. புதுவையில் அனைத்து கல்வி நிலையங்களையும், படிப்புகளையும் கொண்டு வந்துள்ளோம். மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளையும் அரசு வழங்கி வருகிறது. நன்றாக படிக்கும் மாணவர்கள் பெற்றோர்களுக்கு சிரமம் இன்றி படித்து வாழ்க்கையில் முன்னேறலாம். ஏனெனில், கட்டணம் இல்லாமல் படிக்கவும், கட்டண சலுகையுடன் படிக்கவும் அரசு உரிய வழி வகைகளை செய்துள்ளது. அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவம் பயில 10 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எந்த கட்டணமும் இன்றி பல மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரியில் படித்து வருகின்றனர். ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள், அரசு பள்ளிகளை நோக்கி ஆர்வமாக வரவேண்டும் என்ற நோக்கத்தில் அங்கு அடிப் படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

ஆரம்பப் பள்ளியில் கிடைக்கக்கூடிய கல்வி தரமானதாக இருந்தால் உயர்கல்வி எளிதாக இருக்கும். பள்ளிப்படிப்பை மாணவர்கள் சிறந்த முறையில் படிக்க வேண்டும். ஆசிரியருக்கும், நமது பெற்றோருக்கும் நல்ல பெயரை பெற்று தர வேண்டும் என எண்ணி சிறப்பாக படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும். பள்ளிப் பருவத்திலேயே மாணவர் கள் சரளமாக அச்சமின்றி பேசுவதற் கான திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பல குழந்தை களுக்கு திறமை இருந்தாலும், அதனை வெளிப்படுத்துகின்ற ஆற்றல் குறைவாக இருக்கும். எனவே, பேச்சுத் திறமையை வளர்த்துக் கொண்டால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். திறமையான மாணவர்களை உருவாக்கு வதற்கான அனைத்து வசதிகளையும் பள்ளிகளில் அரசு செய்து வருகிறது. புதுச்சேரி மாநிலம் உலக அளவில் வரலாற்று சிறப்பு மிக்க மாநிலமாக திகழ்ந்து வருகிறது. புதுவையில் பல நல்ல தலைவர்கள் இருந்த மாநிலம். நல்ல தலை வர்களுக்கு அடைக்கலம் கொடுத்த மாநிலம். அதைப் பற்றிய செய்திகளை எல்லாம் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சி.பி. எஸ்.இ., பாடத்திட்டத்தில் அதற்கான வாய்ப்பு இல்லை என்பதனால் புதுவையின் முன்னாள் ஆசிரியர்கள் குழு தயாரித்த 'புதுவையின் வரலாறு' என்ற புத்தகத்தை ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கியுள்ளோம். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் சபாநாயகர் செல்வம், கே.எஸ்.பி.ரமேஷ் எம்.எல்.ஏ., பள்ளிக்கல்வித்துறை இயக்குனர் பிரியதர்ஷினி, இணை இயக்குனர் சிவகாமி, கல்வித்துறை அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

பள்ளிக் கல்வித்துறை முன்னாள் இயக்குனர் ராமதாஸ் தலைமை யிலான குழுவினர் 'புதுவை வரலாறு' என்ற புத்தகத்தை தயாரித் துள்ளனர். இந்த புத்தகம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி களில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகள் பாதுகாப்பு உறுதிமொழி ஏற்பு




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, தலைமையில் குழந்தைகள் பாதுகாப்பு உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம்.

# ஸ்கூட் தனது நெட்வொர்க்கை படாங், ஃபூ குவோக் மற்றும் சாந்தூ வரை விரிவுபடுத்துகிறது



கோவை, நவ. 15-

சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் (எஸ்ஐஏ) குறைந்த கட்டண துணை நிறுவனமான ஸ்கூட், வியட்நாமில் உள்ள ஃபூ குவோக், இந்தோனே சியாவின் பாடாங் மற்றும் சீனாவின் ஷான்டோ ஆகிய இடங்களுக்கு மூன்று புதிய விமான சேவைகளை அறிமுகப் படுத்துவதாக இன்று அறிவித்துள்ளது. ஃபூ குவோக் மற்றும் படாங்க்கான விமானங்கள் முறையே டிசம்பர் 20–2024 மற்றும் ஜனவரி 6–2025 அன்று தொடங்கும், மேலும் எம்ப்ரேர் இ190இ2 விமானத்தில் இயக்கப்படும். அதே நேரத்தில் ஷான்டோவுக்கான விமானங்கள் ஜனவரி 16 2025 அன்று ஏர்பஸ் ஏ320 குடும்ப விமானத்தில் தொடங்கும். அதன் அரிய வனவிலங்குகள் மற்றும் அழகிய கடற்கரைகள் அறியப்படுகிறது, ஃபூ, குவோக் சாகச அல்லது ஓய்வு ஒரு விடுமுறை சரியான ஒரு வெப்பமண்டல புகலிடமாகும். டிசம்பர் 20 2024 முதல், ஸ்கூட் ஃபூ குவோக்கு வாரத்திற்கு மூன்று முறை விமானங்களை இயக்கும். ஜனவரி 25–2025 முதல் மேலும் இரண்டு வாராந்திர விமானங்கள் சேர்க்கப்படும். இது சிங்கப்பூருக்கும் ஃபூ குவோக்கிற்கும் இடையிலான வாராந்திர விமானங்களின் மொத்த எண்ணிக்கையை ஐந்து மடங்காகக் கொண்டுவரும். ஸ்கூட் வாரத்திற்கு நான்கு முறை பாடாங்கிற்கு விமானங்களை இயக்கும். சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு கடலோர நகரமான ஸ்கூட் வாரத்திற்கு மூன்று முறை ஷான்டோவுக்கு விமானங்களை இயக்கும். ஸ்கூட் ஜகார்த்தாவுக்கு மேலும் இரண்டு வாராந்திர விமானங்களைச் சேர்க்கும், இது நவம்பர் 24,2024 முதல் வாராந்திர விமானங்களின் மொத்த எண்ணிக்கையை வாரத்திற்கு 19 முறை கொண்டு வரும். கோ சாமுய்க்கான சேவைகள் டிசம்பர் 21 முதல் வாரத்திற்கு 21 முறை ஆகவும், டாவோவுக்கான சேவைகளும் அதிகரிக்கப்படும் டிசம்பர் 22 –2024 முதல் வாரத்திற்கு ஐந்து முறை முதல் தினசரி விமானங்கள் வரை அதிகரிக்கும். பிப்ரவரி 14 2025 அன்று கடைசி விமானத் திற்குப் பிறகு நான்சாங்கிற்கான செயல்பாடுகள் நிறுத்தப்படும்.ஃபூ குவோக், பாடாங் மற்றும் ஷான்டோ ஆகிய நகரங்களுக்கு சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஸ்கூட் வியட்நாமில் உள்ள மூன்று நகரங்களுக்கு 31 வாராந்திர விமானங்களையும், இந்தோனேசி யாவின் 11 நகரங்களுக்கு 84 வாராந்திர விமானங்களையும், சீனாவின் 17 நகரங்களுக்கு 89 வாராந்திர விமானங்களையும் ஜனவரி 2025க்குள் இயக்கும்.ஃபூ குவோக், பாடாங், ஷான்டோ ஆகிய இடங்களுக்கான விமானங்கள் இன்று முதல் ஸ்கூட் இணையதளம், மொபைல் பயன்பாடு மற்றும் பிற சேனல்கள் வழியாக முன்பதிவு செய்யக் கிடைக்கும். ஒரு வழி எகானமி வகுப்பு கட்டணங்கள் ஃபூ குவோக்கு ரூபாய் 13,306.57, பாடாங்க்கு ரூபாய் 12,151.57 மற்றும் ஸ்கூட்க்கு ரூபாய். 15,301.57லிருந்து தொடங்குகின்றன. ஸ்கூட் நிறுவனத்தின் இந்தியா மற்றும் மேற்கு ஆசியாவின் பொது மேலாளர் பிரையன் டோரி கூறுகையில், "ஸ்கூடின் விரிவாக்கப் பட்ட நெட்வொர்க்குடன், இந்தியாவிலிருந்து ஃபூ குவோக், பாடாங் மற்றும் ஷான்டோ போன்ற இடங்களுக்கு அதிகரித்த பயணத்திற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடை கிறோம். என்றார்.

# கேஸ் டேங்கர் லாரிகளில் விபத்து ஏற்பட்டால் தடுப்பது குறித்து ஒத்திகை நிகழ்ச்சி



கயத்தாறு, நவ. 15-

கங்கைகொண்டானில் சிப்காட் வளாகத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிட் டெட், சார்பில் கேஸ் டேங்கர் லாரிகளில் விபத்து ஏற்பட்டால் எப்படி அதனை தடுப்பது குறித்து ஒத்திகை நடத்தி காட்டினர். கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் எல்பிஜி பாட்டில் ஆலையில் இருந்து வீடுகளுக்கு உபயோகிக்கும் திரவ பெட்ரோலிய எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச்செல்லும் லாரிகள் திடீரென்று சாலையில் வரும்போது விபத்துக்கள் ஏற்பட்டால், அதனை எவ்வாறு தடுப்பது குறித்தும், முன்னேற் பாடுகள், குறித்தும் ஒத்திகை நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சியின்போது தொழில்துறை பாதுகாப்பு இணை இயக்குனர் தமிழ்செல்வன் தலைமை வகித்தார். கங்கைகொண்டான் காவல்துறை ஆய்வாளர் வெயில்கனி, கங்கை கொண்டான் தீயணைப்பு துறை நிலையபொறுப்பாளர் கமல்குமார், இந்தியன் ஆயில் ஆலை மேலாளர் ஆதர்ஷ் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இந்த தீ தடுப்பு ஒத்திகை நிகழ்ச்சியிக்கு மெக்கீன் எனர்ஜி நிறுவன மேலாளர் சச்சின்குமார், பாதுகாப்பு அதிகாரி அருன்பாலாஜி, நிதி மற்றும் மனிதவளமேம்பாட்டுத் துறை அதிகாரி ஆபின்அந்தோனிராஜ், இந்த சிப்காட் பகுதியில் உள்ள பரஸ்பர உதவி உறுப்பினர்களான ஹெச்.பி.எல், பி.பி.சி.எல்.ஏ.டி.ஜி. டயர்கம் பெணியினர். நோவா கார்பன் அதிகாரிகள் உள்பட ஏராளமானோர் இந்த தீடுப்பு மற்றும் விபத்தில் எப்படி கேஸ் சிலிண்டர் லாரிகளை தடுப்பது குறித்து நடைபெற்ற ஒத்திகை நிகழ்சியில் கலந்துகொண்டனர்

# கண்காணிப்பு குழுக்கூட்டம்




**வேலூர், நவ. 15-**

வேலூர் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் குழுவின் தலைவர் வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் தலைமையிலும், உறுப்பினர் செயலர் மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி முன்னிலையிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார், மாவட்ட வன அலுவலர் குருசுவாமி தபாலா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில் குமரன், மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், ஒன்றியக்குழுத் தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள் மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இலவச அரிசி, சர்க்கரை வழங்கல்



**புதுச்சேரி, நவ. 15-**

புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை சார்பில் அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் 10கிலோ அரிசி, 2 கிலோ சர்க்கரை இலவசமாக வழங்கும் திட்டத்தின் படி ஏம்பலம் தொகுதி முழுவதும் 20 நுகர்வோர் கடைகளில் 12,274 குடும்ப அட்டைதாரர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் லட்சுமிகாந்தன் வழங்கினார். இதில் பொதுமக்கள், நுகர்வோர்கள் மற்றும் கட்சி பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ஆலம் பூண்டி ஸ்ரீரங்க பூபதி நர்சிங் கல்லூரியில் வகுப்புகள் நிறைவு விழா



**செஞ்சி, நவ. 15-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் ஆலம்பூண்டியில் உள்ள ஸ்ரீரங்க பூபதி நர்சிங் கல்லூரியில் பிஎஸ்சி நர்சிங்,டிப்ளமோ நர்சிங், டிஜி என்எம் டிப்ளமோ ஆகிய வகுப்பு களுக்கு வகுப்புகள் நிறைவு விழா மற்றும் பிரிவு உபசார விழா கல்லூரி விழா அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்வி குழுமத்தின் தலைவர் ரங்க பூபதி, தலைமை தாங் கினார். செயலாளர் ஸ்ரீபதி, முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் விஜய லட்சுமி அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு விருந்தினராக டாக்டர் கவிதா கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துரை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அதை தொடர்ந்து மாணவ, மாணவிகள் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதில் துணை முதல்வர் மற்றும் பேராசிரியைகள், மாணவ, மாணவி கள் கலந்துகொண்டனர்.

# தர்மபுரி மாவட்டத்தில் நிலுவையில் உள்ள நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்

## அன்புமணி ராமதாஸ் பேச்சு

**தருமபுரி, நவ. 15-**



தர்மபுரி மாவட்டம் பொம்மிடி, கம்பைநல்லூர் பகுதிகளில் நடந்த பா.ம.க. நிர்வாகிகள் இல்ல திருமண விழாவை கட்சி யின் தலைவர் டாக்டர் அன்புமணி ராம தாஸ் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 3 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தொழி லாளர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிமாநிலங்கள் வெளி மாவட் டங்களுக்கு இடம் பெயர்ந் துள்ளனர். விவசாயிகள் தண்ணீர் இல்லாத காரணத்தால் கூலி வேலைக்கு செல்கிறார்கள். ஒகேனக்கல் உபரி நீர் திட்டத்தை செயல்படுத்தினால் தர்மபுரி மாவட்டத்தில் 80 சதவீத பிரச்சினைகள் தீர்ந்துவிடும். ஆனால் இந்த திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு இதுவரை நட வடிக்கை எடுக்கவில்லை. தர்மபுரி மாவட்டத்தில் நிலுவையில் உள்ள நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் அனைத்து போதைப் பொருட்களும் கிடைக் கிறது. மதுவை கொடுத்து 3 தலைமுறைகளை அழித்து விட்டனர். இப்போது இளைஞர்கள் மது இல்லாமல் இருக்க முடியாத சூழ்நிலை உள்ளது. பள்ளி, கல்லூரி வாசல்களில் போதை பொருட்கள் புழக் கம் அதிக அளவில் உள்ளது. போலீசாருக்கு தெரியாமல் ஒரு போதை பொருள் பொட்டலம் கூட இருக்க முடியாது. இது தான் வளர்ச்சி. மது மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையான நாடுகள் பொருளாதாரத்தில் வீழ்ச்சி யடைந்து உள்ளன. அது போன்று ஒரு நிலைமை தமிழ்நாட்டுக்கு வர கூடாது. அதற்கு தமிழ்நாட்டு மக்கள் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டில் 69 சதவீத இட ஒதுக்கீட்டை பாதுகாக்க சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். பல்வேறு மாநிலங்களில் சாதி வாரி கணக்கெடுப்பு நடக்கிறது.

தமிழ்நாட்டில் 69 சதவீத இட ஒதுக்கீடு ஜெயலலிதா ஆட்சியின் போது பாதுகாக்கப்பட்டுள்ளது. சட்டப்படி ஒரு பஞ்சாயத்து தலை வருக்கு கணக்கெடுக்க அதிகாரம் இருக்கிறது.

வன்னியர் சங்கத் தலைவரை தலையெடுப்பேன் என்று பேசிய நபர் மீது காவல்துறை இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த நபரை குண்டர் சட்டத்தில் அடைத்திருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. அம்பேத்கர் சிலை உடைக்கப்படுவதாக போலீசாரே வதந்தி கிளப்புகிறார்கள். அம்பேத்கர், பெரியார், காரல் மார்க்ஸ் ஆகிய தலைவர்கள் எங்களுடைய கொள்கை வழிகாட்டி என டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

பா.ம.க. வளர்ச்சி அரசியல் செய்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டு மக்களை அழித்துக் கொண்டு இருப்பவர்கள் தான் நமது எதிரி. தமிழ்நாட்டில் டாக்டர்களுக்கு பாது காப்பு இல்லை. சட்டம்ஒழுங்கு சீர் கேடுக்கு டாஸ்மாக் கடையும், போதை பொருட்கள் விற்பனையும் காரணம். இவ்வாறு அன்புமணி ராமதாஸ் பேசினார். இந்த விழாவில் பாமக கவுரவ தலைவர் ஜி.கே. மணி, மாவட்ட செய லாளர்கள் எஸ்.பி. வெங்கடேஸ்வரன் எம்.எல்.ஏ. தமிழ்நாடு உழவர் பேரி யக்க மாநில தலைவர் வேலுச்சாமி அரசாங்கம், மாநில இளைஞரணி செயலாளர் பி.வி.செந்தில், மாவட்ட தலைவர் அல்லி முத்து உள்பட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தேவதானம்பேட்டை ரேஷன் கடையில் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ திடீர் ஆய்வு



**செஞ்சி, நவ. 15-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் தேவதானம் பேட்டையில் செயல்படும் நியாய விலை கடையில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப் பினர் செஞ்சி மஸ்தான் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசி, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாயில் உள்ளிட்ட பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா எனவும் குடும்ப அட்டதாரர்களிடம் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கேட்டறிந்தார்.

ஆய்வின்போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், தேவதானம்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சீனிவாசன், விற்பனையாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

# மேலக்கொட்டையூர் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் தின விழா

**சுவாமிமலை, நவ. 15-**

கும்பகோணம் அருகே மேலக் கொட்டையூர் அங்கன்வாடி மையத்தில் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு பிறந்த நாளை முன் னிட்டு குழந்தைகள் தின விழா கொண் டாடப் பட்டது. இந்நிகழ்ச்சியில் கும்ப கோணம் மாநகராட்சி கொட் டையூர் நடு நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் இருதயராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ செல்வங் களுக்கு இனிப்பு களையும், பரிசு பொருட்களை வழங்கி சிறப்புரை யாற் றினார்.



இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஜெசிமா பர்வீன், ஜெயந்தி, உதவி யாளர் சரிதா ஆகியோர் செய்திருந்தனர்.

# புகையிலைப் பொருட்களை விற்பனை செய்த கடைகளுக்கு சீல்

**தருமபுரி, நவ. 15-**



தர்மபுரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகை யிலை பொருட்கள் நடமாட் டத்தை தடுக்க உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் தீவிர நடவடிக்கை மேற் கொள்ள மாவட்ட ஆட்சியர் கி.சாந்தி உத்தரவிட்டதன் அடிப்படையில் மொரப்பூர் பகுதிகளில் உணவு பாதுகாப்பு துறையினர் மற்றும் போலீசார் இணைந்து பீடா, பேக்கரி, மளிகை, உணவகங்கள் உள்ளிட்ட கடைகளில் ஆய்வு செய்தனர். ஆய்வில் ஆர்.கோபி நாதம்பட்டியில் ஒரு பெட்டி கடை மற்றும் மூக்கனுர்பட்டி யில் ஒரு சிறு மளிகை கடை ஆகிய வற்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டு இருந்த தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப் பட்டு தர்மபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா அபராதம் 2 கடைகளுக்கும் தலா ரூ.25 ஆயிரம் விதித்தார். இதனை தொடர்ந்து காரிமங் கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால், மொரப்பூர் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் திருப்பதி மற்றும் போலீசார் சிலம்பரசன் ஆகியோர் புகையிலை பொருட்கள் விற்பனை செய்த கடைகளுக்கு நேரில் சென்று உத்தரவு நகல் வழங்கி 15 நாட்கள் கடை திறக்க கூடாது என எச்சரித்து நோட்டீஸ் வழங்கினர்.

# மின்னணு முறை பயிர் சாகுபடி கணக்கெடுப்பு பணி



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டாரம், மணவாளன்கரை கிராமத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், மின்னணு முறை பயிர் சாகுபடி கணக்கெடுப்பு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஊரக வீடுகளில் மறுசீரமைப்பு பணி குறித்து ஆய்வு



கடலூர் மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியம், காட்டுக்கூடலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஊரக வீடுகளில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தெருமின்விளக்கு கணக்கெடுக்கும் பணியை ஆட்சியர் ஆய்வு



**விழுப்புரம், நவ. 15-**

விழுப்புரம் நகராட்சிக் குட்பட்ட பாண்டியன் நகரில் தெருமின்விளக்கு கணக்கெடுக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில், விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெருவிளக்கு விபரம் விவாதிக்கப் பட்டதை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து பேரூராட்சிகள் நகராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளிலும் குக்கிராமங்கள் வாரியாக உள்ள தெருவிளக்குகளின் எரிபவை, எரியாதவை, புதிய மின் விளக்கு தேவைகள் ஆகிய விபரங்களை ஆய்வு செய்தும், கணக்கெடுப்பு செய்தும் அரசிற்கு அறிக்கை அனுப்பிட ஏதுவாக ஊராட்சி செயலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் மகளிர் சுய உதவிக்குழு தலைவர்கள் வாயிலாக 14.11.2024 மற்றும் 15.11.2024 ஆகிய தேதிகளில் கணக்கெடுப்பு செய்ய உத்தர விடப்பட்டது.

அதனடிப்படையில், இன்றைய தினம், விழுப்புரம் நகராட்சிக் குட்பட்ட பாண்டியன் நகரில் தெருமின்விளக்கு கணக்கெடுக்கும் பணியினை நேரில் ஆய்வு மேற்கொண்டதுடன், அப்பகுதி மக்களிடம் தெருமின்விளக்கு நல்ல நிலையில் உள்ளதா எனவும், நாள்தோறும் உரிய நேரத்தில் எரிகிறதா என்பது குறித்து கேட்டறியப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தெரிவித்துள்ளார்

ஆய்வின்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற் பொறியாளர் மோகன், நகராட்சி உதவி பொறியாளர் ராபர்ட் உட்பட துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# புதுவையில் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்க புதிய இணையதளம்

## முதலமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைப்பு



**புதுச்சேரி, நவ. 15-**

புதுவை பள்ளிக் கல்வித்துறை மூலம் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் புதிய பள்ளிகள் தொடங்கவும், சி.பி.எஸ்.இ., மற்றும் ஐ.சி.எஸ்.இ., அங்கீகாரம் பெறவும் தேசிய தகவலியல் மையம் மூலம் தொடங்கப்பட்ட இணைய தளத்தை முதலமைச்சர் ரங்கசாமி, கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் சபாநாயகர் செல்வம், கல்வித்துறை இயக்குனர் பிரியதர்ஷினி, இணை இயக்குனர் சிவகாமி ஆகியோர் உள்ளனர்.

## அமைச்சரை வரவேற்ற ஊராட்சி மன்ற தலைவர்



தென்காசி மாவட்டம் பொட்டல்புதூர் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசலில் ஆய்வு பணிக்காக வந்த சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரனை பொட்டல் புதூர் ஊராட்சி மன்ற தலைவர் கணேசன் வரவேற்றார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன்.

# குழந்தைகளுக்கான நடை பயணத்தை துவக்கி வைத்த ஆட்சியர்




**விழுப்புரம், நவ. 15-**

விழுப்புரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பில், உலக மற்றும் தேசிய குழந்தைகள் தினம் மற்றும் உலக குழந்தைகளுக்கான பிரச்சனை தடுப்பு தினத்தினை முன்னிட்டு, குழந்தைகளுக்கான நடைப்பயணத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பில், உலக மற்றும் தேசிய குழந்தைகள் தினம் மற்றும் உலக குழந்தைகளுக்கான பிரச்சனை தடுப்பு தினத்தினை முன்னிட்டு, குழந்தைகளுக் கான நடைப்பயணத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பில், உலக மற்றும் தேசிய குழந்தைகள் தினம் மற்றும் உலக குழந்தை களுக்கான பிரச்சனை தடுப்பு தினத்தினை முன் னிட்டு, குழந்தைகளுக்கான நடைப்பயணம் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நடைபயிற்சி யில் 600க்கும் மேற்பட்ட அரசு சட்டக்கல்லூரி மாணவ, மாணவியர்கள், தனியார் கல்லூரிகள், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் பங் கேற்று குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி எண் 1098 மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பதாகை களை கையில் ஏந்தியும், பொதுமக்களிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கியும் விழிப் புணர்வு ஏற்படுத்தினர்.

விழிப்புணர்வு நடை பயணமானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி, விழுப்புரம் நான்குமுனை சந்திப்பு வரை சென்று நிறைவடைந்தது என மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண் காணிப்பாளர் டாக்டர் தீபக் சிவாச்

கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் பார்கவி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அறிவழகன், மாவட்ட சமூக நல அலுவலர் ராஜம்மாள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் (பொ) கவிதா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உலகத் தமிழ் தொழிலதிபர்கள் மாநாடு ஆலோசனைக் கூட்டம்




**தஞ்சாவூர், நவ. 15-**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் திரைஸ் அமைப்பின் சார்பில் ஜனவரி மாதம் சென்னை யில் நடைபெறும் 14வது உலகத் தமிழ் தொழி லதிபர்கள் மற்றும் திற னாளர்கள் மாநாடு தொடர்பான ஆலோச னைக் கூட்டம் தனியார் ஹோட்டலில் நடை பெற்றது.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய திரைஸ் அமைப்பின் நிறுவனர் ஜெகத் கஸ்பர்: (திரைஸ்) அமைப்பு நடத்தும் 14 வது உலகத் தமிழ் தொழிலதிபர்கள் மற்றும் திறனாளர்கள் மாநாடு வரும் ஜனவரி 8 முதல் 11ம் தேதி வரை சென்னையில் நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் 40 க்கும் மேலான நாடுகளின் ஆயிரத்திற்கும் மேலான வெற்றித் தமிழ் தொழிலதிபர்கள் மற்றும் திறனாளர்கள் கலந்து கொள்கிறார்கள். பல்வேறு துறைகளின் முக்கிய தமிழ் ஆளுமைகள், தமிழகத்தின் முக்கிய அமைச்சர்கள் பங்கேற்று சிறப்பு செய்கின்றனர்.

தமிழர்கள் உள்ளூரில் செய்யும் தொழில்களை உலகமயப்படுத்துவது, ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில் தமிழர் களுடைய உலகளாவிய வலை பின்னல்களை வசப்படுத்துவது, தொழில் வணிக வளர்ச்சிக்கு அடிப்படை தேவையான மூலதனத்தை திரட்ட வழிகாட்டுவது மாநாட்டின் நோக்கம். மாநாடு மூலமாக வடகிழக்கு இலங்கை, மலையகம், இந்திய தமிழகம் மற்றும் மலேசிய நாடுகளில் தொழில் தொடங்க விரும்பும் ஸ்டார்ட் அப் தொழில் முனைவோர் 20 பேருக்கு தொடக்க நிலை நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில், பெண்களுக்கு சிறப்பு முன்னுரிமையும் அளிக்கப்பட உள்ளது.

மேலும் மாநாட்டில் பங்கேற்க விரும்புவோர் www.tamilrise.org <http://www.tamilrise.org> என்ற இணையதளம் மூலமாகவும், 9150060032, 9150060035 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தார்.

# மேட்டூர் டி.டி.டி.ஏ தொடக்கப்பள்ளியில் குழந்தைகள் தின விழா



**கடையம், நவ. 15-**

தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள மேட்டூர் டி.டி.டி.ஏ தொடக்கப்பள்ளியில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் ஜோயல் சாம் மெர்வின் தலைமை வகித்தார். மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. கடையம் ஒன்றிய தமிழக வெற்றி கழக நிர்வாகி கிரிப்சன் சார்பில் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தலைமை ஆசிரியர் விஜிலா ஜூலியட் ரூபா ஆசிரியர்கள் ஜெயா, சுதா, வளர்மதி, தங்க கோல்டா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்த செல்லமணி, பால்ராஜ், ஜெயராஜ், கனகராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007